29th October 1962]

Government Press for Salem

* 864 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Information be pleased to state—

(*a*) whether there is any proposal to open a branch of the Government Press at Salem, for the speedy execution of the printing works of the Government; and

(*b*) if so, when?

THE HON. SRI G. BHUVARAHAN:

(*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: பஞ்சாயத்து, கிராம அதிகாரிகள் முதலியவர்களுக்குச் சப்ளை செய்யப்படுகிற பாரங்கள் காலாகாலத்தில் சப்ளை செய்யப்படாமல், காலதாமதம் ஏற்படுவதால், அரசாங்க அச்சகம் ஒன்று சேலத்தில் ஏற்படுத்தப்படாவிட்டாலும், அந்தந்த ஜில்லா ஹெட்குவார்டர்ஸில் உள்ள கோவாபரேடிவ் பிரிண்டிங் பிரஸில் அந்த வேலைகளைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஜி. பூவராகன்: கூட்டுறவு அச்சகத்திலே அந்த வேலைகளைக் கொடுப்பதற்கு ஒன்றும் ஆட்சேபனை கிடையாது. சேலத்தைப் பொறுத்தவரையில் அந்த நகராட்சி ஒரு அச்சகம் ஏற்படுத்துவதாக யோசனை இருக்கிறது. அதைப்பற்றி அவர்கள் விளக்கம் கேட்டிருந்தார்கள். அந்த விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒரு அச்சகம் அங்கே ஆரம்பிக்கிறார்களா இல்லையா என்பது அவர்களுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. க. ர. முனிரத்தினம்: இப்படிப்பட்ட அச்சகங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஜி. பூவராகன்: இல்லை.

புது ரயில் பாதைகள்

* 865 *கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்:* கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டையையும் திண்டிவனத்தையும் இணைக்கப் புகை வண்டித்தொடர் அமைக்கும்படி நம் அரசாங்கம் இந்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தி உள்ளதா?

(இ) அப்படியானால் அத் திட்டம் எப்போது நிறைவேறும்?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) No, Sir.
(*b*) Does not arise.

[29th October 1962

புலவர் கா. கோவிந்தன் : பெரிய மாவட்டமாக இருந்தும், அங்கே போதிய ரயில் பாதை இல்லை என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறதா ? அப்படி உணர்ந்து இந்தத் திட்டத்தை வற்புறுத்துவதற்கு அரசாங்கம் நினைக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : ஒவ்வொரு மாவட்டத்தின் நிலையையும் நன்றாகப் பரிசீலனை செய்துதான் மத்திய அரசாங்கத்திற்குச் சில திட்டங்களை நமது அரசாங்கம் சிபார்சு செய்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டங்கள் அமைந்திருக்கின்றன.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் அமைச்சர் அவர்களது பதிலிலிருந்து நான் அறிய விரும்புவது என்னவென்றால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எடுத்துக்கொள்ளப் பட வேண்டும் என்று எந்தெந்தப் பாதைகள் சிபார்சு செய்யப் பட்டன ? அவற்றில் ரயில்வே இலாகா எந்த எந்தப் பாதைகளை ஒப்புக்கொண்டார்கள், எதை எதை நிராகரித்தார்கள் ?

THE HON. SRI V. RAMAIAH : The following lines were arranged to be taken up in the Third Five-Year Plan in the order of priority :—

1. Virudhunagar-Aruppukottai-Mudukalathur-Kilakarai line.
2. Salem-Bangalore line.
3. Manamadurai-Tuticorin line.
4. Tirunelveli-Cape Comorin line.
5. Chinnasalem-Chingleput line.
6. Theni-Gudalur line.
7. Salem-Tiruchirappalli via Karur line.

அவர்கள் இப்பொழுது நடைமுறையில் வேலைக்கு எடுத்துக் கொண்டிருப்பது—

1. Salem-Bangalore line.
2. Virudhunagar-Aruppukottai-Mudukalathur-Kilakarai line.
3. Manamadurai-Tuticorin line.

* 866 *Q.*—SRI V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government have recommended to the Central Government the formation of a rail line between Tirunelveli and Nagercoil.

THE HON. SRI V. RAMAIAH : Yes, Sir.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : திருநெல்வேலிக்குத் தெற்கே இருக்கிற எல்லா மக்களும் பல காலமாக வேண்டிக் கொண்டிருக்கிற முக்கியமான ஒரு லைன் இது. ஆகையினாலே திருநெல்வேலிக்கும் கன்னியாகுமரிக்கும் இடையிலே போடப்படவேண்டிய இந்த ரயில்வே லைன் திட்டத்தை உடனடியாக அமுல்படுத்துவதற்கு, 'டாப் பிரையாரிடி' கொடுக்க நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்யுமா ?